1972 ஆகஸ்ட் 23]

THE HON. THIRU S. MADHAVAN: I have no difference of opinion at all in this respect. Certainly we will take up the question of reduction in tariff with the Government of India, if that aspect is brought to the notice of the Government for its consideration.

THIRU S. NARAYANASWAMY: Are the Government of Tamil Nadu aware that already in respect of salt based chemical industries a great deal of research work has been undertaken and some new products for the first time have been produced in Tamil Nadu in the form of Cromine and other salt based chemicals?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படிப்பட்ட தொழில்கள் நடந்து வருகின்றன. அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவரையே துணைத் தலைவராகப் போட்டிருக்கிறோம். இன்னும் அதிகமாக வளர்ச்சி பெறும் என்ற நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது.

MR. CHAIRMAN: Questions 230 and 231 are postponed.

Children of Ex-Servicemen

* 232 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of Children of Ex-Servicemen who are being given monetary help by the Government in Thanjavur district; and

(b) the amount disbursed during the last three years?

முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் அரசிடமிருந்து பணவுதவி பெறும் முன்னாள் படைவீரர்களின் குழந்தைகள் எத்தனை பேர்?

(இ) கடந்த மூன்றாண்டுகளில் அளிக்கப் பெற்ற தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:

(அ) 1968–69—1,577, 1969–70—1,774, 1970–71—1,493.

(இ) 1968–69—ரூ. 24,022-60.

1969–70—ரூ. 37,885-57.

1970–71—ரூ. 30,387-35.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பாடப் புத்தகங்கள் வழங்க எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன என்று அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, 408 பேருக்கு பாடப் புத்தகங்கள் வழங்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

Madhavaram Milk Project

* 233. *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether milch and dry cows were auctioned in Madhavaram Milk Project during 1970–71 and 1971–72; and

(*b*) if so, the details thereof?

மாதவரம் பால் பண்ணை

திரு. எஸ். எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாதவரம் பால் பண்ணையில் கறவை மாடுகளும் பால் வற்றிய மாடுகளும் 1970–71, 1971–72-ல் ஏலத்திற்கு விடப் பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) ஏலம் விடப்பட்ட பசுக்களின் எண்ணிக்கை, ஏட்டு மதிப்பு, கிடைத்த தொகை ஆகியவை பின்வருமாறு:—

ஆண்டு.	பசுக்களின் எண்ணிக்கை			ஏட்டு மதிப்பு ரூ.	கிடைத்த தொகை. ரூ.
	கறவைப் பசு.	பால்வற்றிய பசு.	மொத்தம்.		
1970–71	41	91	132	76,030	43,990
1971–72	64	35	99	78,600	46,195